# அரேபியர்கள் இரண்டுபட்டால் அமெரிக்காவுக்கு கொண்டாட்டம்

கலையரசன்

ஜோர்டான் மன்னர் அப்துல்லா அமெரிக்கத் தொலைக்காட்சி ABCக்கு அளித்த பேட்டியில் மத்திய கிழக்கில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் ஈராக், லெபனான், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜோர்டான் உளவுத்துறை சேகரித்த தகவல்களின் அடிப்படையிலேயே மன்னரின் மேற்படி உரை அமைந்துள்ளதை மறுப்பதற்கில்லை.

இந்தப் போர்கள் மத்திய கிழக்கின் பூகோள அரசியல் எதிர்காலத்தை மாற்றிவிடக் கூடாது என்ற கவலையில் (அமெரிக்க ஆதரவு) அப்துல்லாவின் உரை அமைந்துள்ளது.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தாயான இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அப்துல்லா கூறியுள்ளார். இதே கருத்தை ஐ. நா. ஆய்வுக்குழுவின் அறிக்கையும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர்களின் அபாயம் பற்றிய எச்சரிக்கை காலம் கடந்து வந்துள்ளது.

ஏற்கனவே, ஈராக் உள்நாட்டுப் போருக்குள் சிக்கிக்கொண்டு மீளமுடியாமல் தவிக்கின்றது.

பாலஸ்தீனத்தில் அதன் அறிகுறிகள் காணப் பட்டாலும் புயலுக்கு முன்னான அமைதியே தற்போது நிலவுகின்றது.

லெபனானில் சரித்திரம் திரும்பி வர எத்தனிக்கிறது. வழக்கம் போலவே வல்லரசுகள் உள்நாட்டுப் போர்களால் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றன.

மக்களைப் பிரித்து ஆளும் சூழ்ச்சி அன்று மட்டுமல்ல, இன்றைக்கும் நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் சாணக்கியம்தான்.

இனி, இம் மூன்று உள்நாட்டுப் போர்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விரிவாகப் பார்ப்போம்.

## ஈராக்:

**எண்ணைக் கிணறு வெட்ட வகுப்புவாத பூதம் கிளம்பியது**

"எனக்குத் தெரிந்த ஒரு ஈராக்கிய வாலிபர் பொலிஸ் படையில் புதிதாகச் சேர்ந்தபொழுது ஏதோ ஒரு அமெரிக்கத் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று பயிற்சியளித்தது. பெரும்பாலான பயிற்சி நேரங்களை அந்த வாலிபர் ஜீப் வண்டி ஓட்டுவதிலும் ஆயுதங்களைக் கையாள்வதிலும் செலவிட்டார். பயிற்சி முடிந்த பின்பு ஒரு நாள் வேலைக்கு நியமித்துள்ளதாக அழைப்பு வந்தது. அவரிடம் ஒரு ஜீப்வண்டியைக் கொடுத்து பாக்தாத்தின் சன நெருக்கடி மிக்க சந்தைப் பகுதி ஒன்றில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுமாறும் அங்கிருந்து அவருக்குத் தரப்பட்ட கைத்தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்படியும் தெரிவிக்கப் பட்டது. குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற வாலிபர் ஜீப்பில் இருந்தபடியே கைத்தொலைபேசியை இயக்கிய பொழுது சிக்னல் கிடைக்கவில்லை. பின்னர் இறங்கி சிறிது தூரம் சென்று சிக்னல் கிடைத்துத் தொடர்பு கொண்டபோது... ஜீப் வெடித்துச் சிதறியது"

-சிரிய பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் தகவல்
(Independent 26.04.06)

"பாக்தாத்தில் ஒதுக்குப்புறமான இடத்தில் 14 வாலிபர்களின் இறந்த உடல்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டன. அந்த 14 பேருக்கும் ஒரு ஒற்றுமை இருந்தது. அனைவரும் 'ஒமார்' என்ற பிரத்தியேகமாக சுன்னி முஸ்லிம்களுக்கேயுரிய பெயரைக் கொண்டவர்கள். அச்சமடைந்த உறவினர்கள் பிணங்களைப் பொறுப்பெடுக்க வரவில்லை. அவை தெரு நாய்களுக்கு உணவாகின."

- (Guardian 04.08.06)

"யூலை, ஒகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற

வகுப்புவாதக் கலவரங்களில் மட்டும் 7000 சுன்னி அல்லது ஷியா முஸ்லிம்கள் இறந்துள்ளனர். இரு தரப்பிலும் 3 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். நாளொன்றிற்கு 3000 பேராவது அகதிகளாகப் பிற நாடுகளுக்கு ஓடியுள்ளனர்"

- ஐ. நா. சபையின் விசேட அறிக்கை

இவ்வளவு நடந்தும் புஷ் நிர்வாகம் ஈராக்கில் உள்நாட்டுப் போர் அல்லது வகுப்புவாதக் கலவரம் நடப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஷியா முஸ்லிம்களைப் பெரும்தொகையாகக் கொல்லும் குண்டு வெடிப்புகள் எல்லாம் சில வெறிபிடித்த பயங்கரவாதிகளின் செயல் (சுன்னி முஸ்லிம் மக்களை) படுகொலை செய்யும் அரசு சார்ந்த கொலைகாரக் கும்பல் யாவும் இனம் தெரியாதவர்கள்.



இவ்வாறுதான் சர்வதேச செய்தி ஊடகங்கள் எமக்குத் தெரிவித்து வந்தன. உலக மக்களும் அப்படியே நம்ப வைக்கப்பட்டனர். அதேநேரம், ஈராக் பொது மக்கள், 'அமெரிக்க ஆட்சியைவிட சதாமின் ஆட்சி மேல்'என்று கூறுமளவிற்கு அங்கே நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே சுன்னி-ஷியா என்ற இரு முஸ்லிம் பிரிவுகள் மார்க்க அடிப்படையில் பிரிந்திருந்தபோதும் இரு சமூக மக்களும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில்லை. சுன்னி இஸ்லாம் பிரிவைச் சேர்ந்த சதாம் ஹுசைனின் ஆட்சியில் ஷியா முஸ்லிம்கள் அடக்கப்பட்டதாக மேற்கத்தைய ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பான செய்திகளைக் கூறி வந்தன. உண்மையில் சதாம் தனக்கு எதிரான அரசியல் சக்திகளாக இனம் கண்ட ஷியா மதத் தலைவர்களையே கைது செய்து சிறையிலடைத்தார். சாதர் குழு அல்லது மஹ்தி குழு போன்ற ஆயுதமேந்திய ஈரான் ஆயத்துல்லாக்கள் வழியில் நடக்கும் மத அடிப்படைவாத இயக்கங்கள் முழு ஷியாக்களினதும் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. இவர்களின் சதாம் அரசுக்கெதிரான சில தாக்குதல்கள் பலமுறை தோல்வியடைந்த போதிலும் சந்தேகத்தின் பேரில் பல ஷியா மக்கள் கைது செய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். ஈராக்கில் ஷியாக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதான ஆதங்கம் அந்த மக்களுக்கு இருந்தபோதும், அதற்காக ஒரு போதும் அவர்கள் ஆதிக்கப்பிரிவான சுன்னி முஸ்லிம்களை வெறுக்கவில்லை. ஈரான் - ஈராக் யுத்தத்தின்போதுகூட ஷியா மக்கள் சதாம் அரசுக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டார்கள். ஈரானியர்களும் ஷியாக்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் தமது தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை. 1990ம் ஆண்டு இடம்பெற்ற குவைத் மீதான ஆக்கிரமிப்பும் அதைத் தொடர்ந்த வளைகுடாப் போரும் ஈராக்கின் எதிர்காலத்தைத் தீர்மானித்தது. போரால் தோற்ற ஈராக்மீது ஐ. நா. சபை நாடுகள் (அமெரிக்க அழுத்தத்தால்) பொருளாதாரத் தடை விதித்தன. வடக்கு ஈராக்கில் குர்திய பிரதேசத்தின்மீதும், தெற்கு ஈராக்கில் ஷியா பிரதேசத்தின்மீதும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டதால் சதாமின் அரசு மத்திய ஈராக்கினுள் முடக்கி வைக்கப்பட்டது. சில ஆண்டுகளின்பின் பொருளாதாரத் தடை காரணமாக ஈராக் மக்கள் பட்டினி கிடந்து சாவதாக சர்வதேசக் கண்டனங்கள் எழுந்ததால் ஐ. நா. சபை 'எண்ணைக்குப் பதிலாக உணவு' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின்படி ஈராக் அரசு சர்வதேசச் சந்தையில் தான் விற்கும் எண்ணையின் பெறுமதிக்குச் சமமான உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அதைக்கூட ஈராக் அரசு தான் விரும்பியபடி செய்ய முடியாது. எந்தெந்த உணவுப் பொருட்களை, எங்கே வாங்க வேண்டும் அதை ஈராக்கிற்கு எப்படிக் கொண்டு போவது யாருக்குப் பங்கிட்டுக் கொடுப்பது போன்றவற்றை ஐ.நா சபையே தீர்மானித்தது. அதிலும் பல ஐ. நா. அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் (தலைவர் கோபி அனானின் மகன் உட்பட) முறைகேடுகளில் ஈடுபட்டு கோடிக்கணக்கில் சுருட்டியவை வேறு கதை.

இந்த எண்ணை - உணவுப்பொருள் பண்டமாற்று நியாயமாக நடத்தப்படவும் இல்லை; அதன் பலனெல்லாம் மக்களுக்குப் போய்ச் சேரவும் இல்லை. குறிப்பாக, ஈராக்கின் மொத்த சனத்தொகையில் 13வீதமேயுள்ள குர்திய மக்களுக்கு மொத்த வர்த்தகத்தின் 43வீத வருமானம் போய்ச் சேர்ந்தது. குர்தியப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இரு ஆயுதமேந்திய இயக்கங்கள் சட்டவிரோதமாக எண்ணை கடத்தி விற்றுக் கிடைத்த வருமானம் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஐ. நா. தயவில் சுயதாதீனமாக இயங்கக்கூடிய நிலையில் (இன்றுவரை எவராலும்

அங்கீகரிக்கப்படாத) 'குர்திஸ்தான்' என்ற தனிநாடே உருவாகிவிட்டது. எண்ணை கடத்தலால் அங்கே பெற்ற வருமானம் யப்பானில் இருந்து இறக்குமதி செய்த எலக்ட்ரோனிக் பொருட்கள் சொகுசு வாகனங்கள் என்று செலவு செய்யப்பட்டு பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் ஈராக்கின் பிறபகுதிகளில் வாழ்ந்த அரபு மக்கள் சாப்பாடு தேடி அலைந்து கொண்டிருந்தனர். தெற்கு ஈராக் ஷியா மக்கள் வான்வெளிக் கண்காணிப்புக்குள் அடங்கியதால் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டபோதும் அவர்களும் பட்டினிச்சாவில் இருந்து தப்பவில்லை.

புஷ் நிர்வாகம் ஈராக் மீதான படையெடுப்பை ஆரம்பித்தபோது சி. ஐ. ஏ. யும் அமெரிக்க இராணுவமும் குர்திய ஆயுதக் குழுக்களின் உதவியோடு முன்னேறின. அரபு மக்களையும் குர்திய மக்களையும் மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் நிரந்தரமாகப் பிரித்துவிட்டன. அரபுக்கள் குர்தியரை ஏகாதிபத்தியத்தின் அடியாட்களாகப் பார்த்தனர். குர்திய ஆயுதக் குழுக்களுக்கு இஸ்ரேல் இராணுவப் பயிற்சி அளித்ததாக வந்த தகவல்கள் தற்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. இன்றுள்ள ஈராக்கின் புதிய இராணுவத்திலும் பொலிஸிலும் கணிசமான அளவு குர்தியர்கள் பணி புரிகின்றனர்.

அமெரிக்க இராணுவம் ஈராக் முழுவதையும் பிடித்த பின்பு செய்த முதல் வேலை சதாம் ஆட்சியின் கீழ் பணி புரிந்த அனைத்து இராணுவ வீரர்களையும் வீட்டிற்கு அனுப்பியதுதான். அந்தப் பழைய இராணுவத்தில் பெருமளவு சதாம் விசுவாசிகளும் பாத் ஆதரவாளர்களும் சுன்னி முஸ்லிம்களும் அங்கம் வகித்தமை உண்மைதான். இருப்பினும் இராணுவத் தொழிலைத் தவிர வேறெதுவும் தெரியாத வீரர்கள் தொழிலிழந்தவர்களாய்த் தமது குடும்பத்தைக் காப்பாற்றும் வழி தெரியாது திண்டாடினர். இந்த அவலங்களை எள்ளளவும் கவனத்திற்கெடுக்காத அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் சதாம் புதிதாக உருவாக்கிய ஈராக் இராணுவத்தில் ஷியா முஸ்லிம்களைப் பெருமளவில் சேர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்து வேலையற்றோர் எண்ணிக்கை 80வீதமாக இருந்த காலத்தில் இராணுவ-பொலிஸ் வேலைகளுக்காக ஷியா இளைஞர்கள் முண்டியடித்ததில் வியப்பில்லை. ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட 'பாத்' கட்சியினரும் வேலையிழந்த இராணுவ வீரர்களும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சிக் குழுக்களை அமைத்தனர். இந்தக் குழுக்கள் தேசியவாத அடிப்படையைக் கொண்டிருந்த போதிலும் அவற்றின் உறுப்பினர்கள் சுன்னி முஸ்லிம் பிரிவில் இருந்தே வந்தனர். புதிதாக உருவாக்கப்படும் இராணுவமும் பொலிசும் நாளை தம்மை அடக்க ஏவி விடப்படும் அரச இயந்திரங்களாக மாறும் என்ற நியாயமான அச்சம் காரணமாக பாதுகாப்புப் படைகளில் வேலை தேடிச் சென்ற பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கிளர்ச்சிக்காரர்கள் குண்டு வைத்துக் கொன்றனர். துரதிர்ஷ்டவசமாக இவ்வாறு கொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம்கள் என்பதால் வகுப்புவாதப் பிரிவினை அப்பொழுதே வேர் விடத் தொடங்கியது. பல தசாப்தங்களாக இரண்டாம் தரப் பிரஜைகளாக அரசு அதிகாரமற்றிருந்த ஷியாக்களைப் பொறுத்தவரை தற்போது கிடைத்துள்ளது ஒரு பொன்னான வாய்ப்பு. புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் இராணுவம் பொலிஸ் ஆகிய அதிகார அமைப்புகளில் தமது பிரதிநிதித்துவத்தை ஸ்திரப்படுத்துவதன்மூலம் ஷியா முஸ்லிம்கள் ஈராக்கின் ஆளும் பரம்பரையாக விரும்பின. பொம்மைகளைக்



கொலு வைப்பதைப்போல ஈராக்கியரைத் தன்னிஷ்டப்படி ஆட்டிப் படைத்த அமெரிக்காவும் ஷியா முஸ்லிம்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தது. இதனால் ஷியா மத அடிப்படைவாத சக்திகள் புத்துயிர் பெற்றன. "ஈராக்கில் இஸ்லாமிய புரட்சிக்கான தலைமைக்குழு என்ற கட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரின் பொறுப்பில் உள்துறை அமைச்சு உள்ளதும் பாதுகாப்புப் படைகள் அந்த அமைச்சின் கீழ் வருவதும் இங்கே சுட்டிக் காட்டப்படவேண்டும். மேற் குறிப்பிட்ட மதஅடிப்படைவாதக் கட்சியின் தொண்டர்கள் பொலிஸ்காரர்களாகவும் இராணுவவீரர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். 'மஹ்தி இராணுவம்' என்ற இன்னொரு ஷியா ஆயுதக்குழு ஈராக் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் வரையில் தமக்கென கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அமைத்து தனிக்காட்டு



ராஜாக்களாக ஆதிக்கம் செலுத்தி வந்தன. அந்தப் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் மஹ்தி இராணுவத்தின் ஆயுதங்களைக் களையவும் அமெரிக்க இராணுவம் பல தடவை முயற்சி செய்தபோதும் தோல்வியுற்று, இறுதியில் சமரசமாகப் போனது. மஹ்தி இராணுவ வீரர்கள் பலரை தேசிய இராணுவத்திலும் பொலிஸ் படையிலும் இணைத்ததன் மூலம் அந்தச் சமரசம் எட்டப்பட்டது.

மேலே குறிப்பிட்ட அரசியல் மாற்றங்கள் யாவும், ஒரு பக்கத்தில் அமெரிக்கா ஈராக்கில் புதிய ஆளும் வர்க்கத்தை நிலைநாட்ட உதவியபோதும், மறுபக்கத்தில் சுன்னி- ஷியா முஸ்லிம் பிரிவுகளுக்கிடையில் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் உருவாக்கி அவர்களை எதிரிகளாக்கிவிட்டது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக்கும் கைங்கரியத்தை ஆற்ற எங்கிருந்தோ வந்தார்கள் சர்காவி தலைமையிலான அல்கைதா குழுவினர். ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை தமது சண்டைப் பயிற்சிக்குப் புதிய களம் கிடைத்ததாகக் கருதிய அல்கைதாவினர் சுன்னி முஸ்லிம்களைத் தம் பக்கம் கவர்ந்தனர். அல்கைதா சவுதி அரேபியாவின் வாஹபி என்ற இஸ்லாமியக் கடும் போக்காளரின் கொள்கைகளை தன்னகத்தே கொண்டிருப்பதால் ஷியா முஸ்லிம்கள் ஆதரவளிக்கவில்லை. வாஹபிஸ்ட்டுக்களைப் பொறுத்தவரை சியாக்கள் முஸ்லிம்கள் அல்லர். ஆகவே, 'ஷியா என்ற போலி முஸ்லிம்கள்' மீது வெறுப்புக் கொண்ட ஈராக்கிய அல்கைதா (அல்லது உள்ளூர் மக்கள் பார்வையில் வாஹபிஸ்டுக்கள்) ஷியா முஸ்லிம்களின் புனிதத் தலங்களைத் தாக்குவதன்மூலம் தமது மதவாத அதிகாரத்தை சுன்னி முஸ்லிம்கள் மத்தியில் நிலைநிறுத்த விரும்பியது. ஷியா ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது என்ற பெயரில் அப்பாவி ஷியா முஸ்லிம்களை கொன்று குவித்தது. அவர்களது தொலைநோக்கற்ற குறுகிய மதவாதம் தற்காலிகமாகச் சில சுன்னி முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தது. இருப்பினும் ஒரு கட்டத்தில் இப்படியான செயல்கள் தமக்குத் தீமையே அன்றி நன்மையைத் தரா எனப் புரிந்து கொண்ட ஈராக்கிய சுன்னி முஸ்லிம் மக்கள் அல்கைதாவை ஒதுக்க ஆரம்பித்தனர். ஆனால் அப்போது காலம் கடந்துவிட்டது.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியில் இஸ்லாமியவாதிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் நாடளாவிய அமைப்பாக ஒழுங்குபடுத்தக்கூடிய பலமான தலைவர் இல்லாமல் இருந்த கிளர்ச்சிக் குழுக்கள் சர்காலியின் வரவுக்குப் பின் உற்சாகமடைந்தன. இருப்பினும் சர்காலியின் குறுகிய மதவாத அரசியல் அழிவுப்பாதையில் கொண்டு செல்லும் பிழையான சித்தாந்தம் என்பதைப் புரிந்து கொண்ட போராளிகளும் ஆதரவாளர்களும் மெல்ல விலகிக் கொண்டனர். ஒரு சில இடங்களில் உள்ளூர் நிலப் பிரபுக்களால் ஆதரிக்கப்பட்ட, ஈராக் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்ட பிரதேசவாதக் குழுக்கள் அல்கைதாவை எதிர்த்துப் போராடி விரட்டி அடித்தனர். அல்கைதா ஆதரவாளர்கள் தற்போது ஈராக் எல்லையோரம் இருந்த அன்பர் மாகாணத்தை மட்டும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர். அமெரிக்க இராணுவம் இருந்த மாகாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்து பின்வாங்கியுள்ளது.

இன்றுள்ள ஈராக் அரசியல் நிலவரத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம். வடக்கே குர்திஸ்தான் பிரதேசத்தில் முன்பு ஒரு காலத்தில் ஒன்றோடொன்று எதிர்த்து சகோதர சண்டையிட்டுக் கொண்டிருந்த பர்சானி மற்றும் தலபானி தலைமையிலான இரு குர்திய இயக்கங்கள் தற்போது தமக்குள் உடன்பாடு கண்டு சமாதானமாகி உள்ளன. குர்திஸ்தான் (பிராந்திய) பாராளுமன்றத்தில் இரு கட்சிகளும் அங்கம் வகித்தன. இருப்பினும் அவ்விரு கட்சிகளினதும் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். தெற்கே ஷியா முஸ்லிம் அரேபியர்கள் வாழும் பிரதேசத்தில் SCIRI,

மஹ்தி இராணுவம் ஆகிய இயக்கங்களும் தமக்கென சில கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதமேந்திய உறுப்பினர்களையும் நிறுத்தி வைத்துள்ளனர். ஆங்காங்கே காவலரண்கள் அமைத்து பொதுமக்களைச் சோதனையிடுகின்றனர். சில நேரம் ஒரே வீதியில் பொலிஸ் சோதனைச் சாவடியும், சில கிலோமீற்றர்கள் தள்ளி ஆயுதக்குழுக்களின் சோதனைச் சாவடியும் காணப்படுவதால் மக்கள் யாருக்குத் தப்புவது என்று தெரியாமல் திண்டாடுகின்றனர். முழுக்க முழுக்க ஷியா முஸ்லிம்களையே உறுப்பினர்களாகக் கொண்ட அதேநேரம், அப்பாவி ஷியா பொதுமக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்த ஆயுதமேந்திய இயக்கங்கள் கடுமையான இஸ்லாமிய மதச் சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர். இத்தகைய மத அடிப்படைவாத அரசியல் சக்திகளின் ஆதரவு தமக்கு அவசியம் என்பதால் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் இவற்றைக் கண்டு கொள்ளாமல் மறு பக்கம் பார்த்துக்கொண்டு போகின்றன. தலைநகர் பாக்தாத்தைக் கொண்டிருக்கும் மத்திய ஈராக்கைச் சேர்ந்த சுன்னி முஸ்லிம் அராபியர்கள் வாழும் எழுச்சி மிக்க பூமி. அங்கே யாரும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்க முடியாது. ஃபலூஜா போன்ற வீரகாவியம் படைத்த மண்ணுக்குச் சொந்தமானவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்கின்றனர். அதிர்ஷ்டவசமாக, களத்தில் நிற்கும் பாத் தலைமையிலான தேசியவாதக் குழுக்களுக்கும் பிற இஸ்லாமியவாதக் குழுக்களுக்கும் இடையில் கொள்கை வேறுபாடு இருந்தபோதிலும் சகோதரச் சண்டை இதுவரை இல்லை. அமெரிக்கா இதுவரை வெளியே சொல்லாவிட்டாலும் பாக்தாத் நகரம் மட்டும் தான் ஈராக் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அமைச்சு அலுவலகங்கள், பிற அதிகாரமையங்கள் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ராஜதந்திரிகளின் வாசஸ்தலங்கள் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் கட்டளைத் தலைமையகம், ஊடகவியலாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையகங்கள், இவற்றுடன் மேற்படி நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் குடும்பங்கள் எல்லாமே உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்குகின்றன. இந்த உயர்பாதுகாப்பு வலயம் நாலாபுறமும் கோட்டை மதில்களால் சூழப்பட்ட தனியான பிரதேசம். அதாவது பாக்தாத் நகரத்தினுள் இன்னொரு நகரம்.

நிச்சயமாக இந்த உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வசிப்பவர்களுக்கு வெளியில் என்ன நடக்கிறதென்று தெரியாது. சர்வதேச ஊடகவியலாளர் உட்பட, இந்த வலயத்தில் மட்டுமே கிடைக்கும் ஆடம்பரங்களான 24 மணிநேர மின்சாரம், எரிபொருள், உணவுப் பொருட்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் என்பன வெளியில் வாழும் சாதாரண ஈராக்கிய மக்களுக்கு அரிதாகவே கிடைக்கின்றன. இந்த ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலையால் மக்கள் தீவிரவாத இயக்கங்களை நோக்கி இலகுவில் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். பாதுகாப்பின்மை, பொருளாதார நெருக்கடி என்பன புதிய தீவிரவாதிகளை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன. இதுவரை கூறப்பட்ட தகவல்களின்படி ஈராக்கில் அராஜகம் கோலோச்சுவது தெளிவாகும். அங்கே ஜனநாயக முறைப்படி தெரிவான அரசாங்கம் பேரளவில் தான் ஆட்சியில் உள்ளது. இந்த இலட்சணத்தில்தான் ஈராக் பிரச்சினைக்குத் தீர்வென்ன என்று கேட்டு அமெரிக்காவில் புஷ் ஒரு ஆய்வுக்குழுவை அமைத்துள்ளார். இதுபோன்ற எத்தனையோ ஆய்வுக்குழுக்கள்





கடந்த காலத்தில் செய்த எச்சரிக்கைகளைப் பொருட் படுத்தாது மமதையால் தன்னிஷ்டப்படி நடந்து கொண்ட உலகின் அதிசக்தி வாய்ந்த நாட்டின் ஜனாதி பதி புஷ்ஷிற்கு காலம் கடந்த பின்பு ஞானம் பிறந்தி ருக்கின்றது. "சதாமைத் தூக்கிலிட்டோம்; ஜன நாயகத்தை மீட்டோம்" என்பது போன்ற வாய்ச் சவடால்கள் யாருக்கும் உதவவில்லை. சாதாரண ஈராக்கிய மக்களோ "எமக்கு பாதுகாப்பே முதல் முக்கியம். உயிர்போன பின்பு ஜனநாயகம் என்ன தேவைக்கு?" என்று கேட்கிறார்கள்.

தற்போது படிப்படியாக தனது இராணுவத்தை விலத்திக்கொள்ள அமெரிக்க அரசு முன்வந்தபோதும் ஈராக்கின் எதிர்காலம் குறித்து பல கேள்விகள் எழுகின் றன. அமெரிக்க இராணுவம் நாட்டை விட்டுப்போன உடனேயே ஆயுதமேந்திய கிளர்ச்சிக் குழுக்கள் பாக்தாத்தில் இருக்கும் அதிகாரமற்ற பொம்மை அரசைக் கவிழ்த்துவிட்டு தமக்குள் சண்டையிட்டு ஆட்சியதிகாரத்திற்காக போட்டி போடுவார்கள். நிச்சயமாக பலமானதே வெல்லப்போகிறது. அதைவிட ஈராக் மூன்று துண்டாக உடையும் அபாயமும் உள்ளது.

அப்படி உருவாகும் புதிய தேசங்கள் பிராந்திய வல்லரசுகளின் தயவிலேயே தங்கி இருக்க வேண்டி இருக்கும். குர்திஸ்தான் என்ற புதிய நாடு உருவா வதைத் துருக்கி ஏற்றுக்கொள்ளாது. துருக்கியிலும் தனிநாடு கோரும் குர்தியருக்கு இது உந்து சக்தியாக இருக்கும் என்பது மட்டுமல்ல, ஈராக்கின் சிறிய சிறுபான் மையினரான துருக்கி மொழி பேசும் மக்களின் உரிமை களைப் பாதுகாப்பது என்ற பெயரில் அடிக்கடி தலையிடவேண்டி இருக்கும் தெற்கு ஈராக்கில் ஏற்படப் போகும் ஷியா இஸ்லாமியக் குடியரசுக்கு ஈரான் பக்க பலமாக இருக்கும். ஷியா முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தை அரபுலகில் விரிவு படுத்த தனக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன் படுத்தும். அதற்குப் பதிலடியாக சவுதிஅரேபியாவும் ஜோர்டானும் மத்திய ஈராக்கில் சுன்னி முஸ்லிம் அதிகா ரத்தை நிலைநாட்டப் பாடுபடும். சவுதி அரேபியாவில் கணிசமான அளவு ஷியா முஸ்லிம்கள் வாழ்வதும் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் எழுச்சிக்குத் தயாராவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் முதன்முறை யாக வளைகுடாக் கடலின் சிறிய தீவான பாஹ்ரெயினில் ஷியாக்களின் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளமை ஆட்சியாளரை மகிழ்ச் சிப்படுத்தவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அன்று தாம் செய்த பிரச்சாரத்தைத் தாமே நம்பியதன் பலனைத் தற்போது அனுபவிக்கின்றனர். சதாமின் சர்வாதி காரத்தில் இருந்து தம்மை விடுதலை செய்ததன் நன்றியாக ஈராக்கிய மக்கள் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப் பார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது. அதனால் பின்னரும் தீவிர வாதக் குழுக்களுடன் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டது. முதலில் அமெரிக்கா குர்திய ஆயுத பாணிக் குழுக்களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அரேபியர்களை (சுன்னி - ஷியா முஸ்லிம்கள்) எதிர்த் துப் போரிட்டது. இரண்டாவதாக, ஷியா ஆயுதபாணிக் குழுக்களுடன் சேர்ந்துகொண்டு சுன்னி முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட்டது. கடைசியாக, சுன்னி முஸ்லிம் ஆதிக்கத்தில் இருக்கும் சில முன்னாள் பாத் கட்சித் தலைவர்களுடன் சில உடன்பாடுகளுக்கு வர உள்ளது. அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட யாரு டனும் கூட்டுச் சேரலாம். யாரோடும் எதிர்த்துப் போரிட லாம். ஈராக்கில் எதிர்காலத்தில் எந்த அரசியல் சக்தி ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச பொருளாதார சமூகத் தில் சேராமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அப்போது அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணுதல் தவிர்க்க முடியாதது. பொருளாதார வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கின் சதாமின் காலம் ஒரு பொற் காலம். தேசிய மயமாக்கப்பட்ட எண்ணை உற்பத்தி யால் கிடைத்த வருமானம் அபிவிருத்திக்குச் செல விடப் பயன்பட்டதால் தனிநபர் வருமானமும் அதிகரித் திருந்தது. அப்போது ஈராக் டினாரின் பெறுமதி அமெரிக்க டொலருக்குச் சமமாக இருந்தது. ஈராக்கின் சபிக்கப்பட்ட நாளைய தலைமுறை இவற்றையெல்லாம் பழங்கதைகளாக மறந்து போகலாம்.

## பாலஸ்தீனம்:
### ஜனநாயக நாடுகள் திணிக்கும் சர்வாதிகாரம்

மறைந்த தலைவர் யாசீர் அரபாத் காலத்தில் இருந்தே பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட போராளிகளுக்கிடையே சகோதரச் சண்டை நடைபெற்று வந்துள்ளது. அரபாத்தின் ஃபதா இயக்கம் பெருந்தொகையான உறுப்பினர்களையும் நிதிவளங் களையும் கொண்டிருந்ததால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற அகிம்சாவழியில் இயங்கிய உதவி நிறுவனத்தைக் கைப்பற்றி முழு பாலஸ்தீனர்களுக் குமான பிரதிநிதிகளாகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டனர். பிற விடுதலை இயக்கங்கள் வேறுபட்ட

கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் அளவில் சிறியதாக இருந்ததால் ஃபதாவின் தலைமையின் கீழ் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினுள் (PLO) உள்வாங்கப்பட்டனர். இந்த நிறுவனமயமாக்கலுக்குள் வர மறுத்தவர்கள் வேட்டையாடப்பட்டு ஒழிக்கப்பட்டனர்.

பாலஸ்தீன விடுதலையை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட ஃபதா இஸ்ரேலுடன் சமரசப் போக்கையே நாடியது. அதாவது, உண்மையான இறுதி இலக்கு பாலஸ்தீனம் என்ற தனிநாடு அல்ல. இஸ்ரேலுக்குள் சுயநிர்ணய உரிமைகளைக் கொண்ட சுயாட்சிப் பிரதேசம். அரபாத்தின் சமரசப் போக்கை பல சுயாதீனப் பத்திரிகையாளர்கள் ஏற்கனவே அம்பலப்படுத்தி உள்ளனர் இஸ்ரேலிய அரசுக்குத்தான் இதனைப் புரிந்துகொள்ள நீண்டகாலம் எடுத்தது அல்லது பாலஸ்தீன தேசியவாதம் என்ற சித்தாந்தமே தனது இருப்புக்கு ஆபத்து என்று அஞ்சியதால் PLO வை பலவீனப்படுத்தும் நோக்கோடு இஸ்லாமிய மத அடிப்படைவாத ஹமாசிற்கு மறைமுக ஆதரவு அளித்தது. அதாவது விடுதலைப் போராட்டத்தினுள் மதத்தைப் புகுத்துவதன்மூலம் கிறிஸ்தவ மற்றும் மதச்சார்பற்ற பாலஸ்தீனர்களை அந்நியப்படுத்திப் பார்த்தது. அந்த நோக்கம் கணிசமானளவு வெற்றி பெற்றுள்ளதைக் கண்கூடாகக் காணலாம்.

சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் பாலஸ்தீன அதிகாரசபை அமைக்கப்பட்ட பின்னர் கூட யாசீர் அரபாத் இஸ்ரேலிடம் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கவில்லை. குறிப்பாக, அயல்நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பாலஸ்தீன அகதிகளின் நாடு திரும்புவதற்கான உரிமையை அரபாத் வலியுறுத்தி வந்தார். இஸ்ரேலோ அந்த உரிமையை மறுத்தது. அதை ஏற்றுக்கொள்ளும் பாலஸ்தீனத் தலைமையை விரும்



பியது. அதற்கு ஏற்ற ஆளாகத் தற்போது அப்பாஸ் கிடைத்துள்ளார். அரபாத் எப்போது சாவார் என்று இஸ்ரேல் மட்டுமல்லாது அப்பாஸ் போன்ற ஃபதா தலைவர்களும் எதிர்பார்த்ததை, "தனது கணவனை உயிரோடு குழியில் போட்டு மூட காத்திருப்பதாக" அரபாத்தின் மனைவி கூறுமளவுக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. பாலஸ்தீனப் பிரதேசங்களின் ஜனாதிபதியாக அப்பாஸ் தெரிவானதும் இனித்தான் நினைத்தபடி ஆட்டுவிக்கலாம் என்று இஸ்ரேலும் பெருமூச்சு விட்டது. ஆனால், ஹமாஸ் வடிவில் வந்தது சோதனை.

பாலஸ்தீன அதிகாரசபை நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கியபிறகுதான் ஃபதா எதற்காக இவ்வளவு தூரம் இறங்கி வந்தது என்பது மக்களுக்குப் புரிந்தது. அரசாங்கம் மட்டுமல்லாது அரசு சார்ந்த நிறுவனங்களிலெல்லாம் ஃபதா ஆட்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் நண்பர்கள் வர்த்தக நிறுவனங்களை ஸ்தாபித்தனர். வர்த்தகர்கள் கொடுத்த லஞ்சத்தில் அரசு அதிகாரிகள் கொழுத்தனர். இதனால் மொத்த அதிகார சபையும் ஊழல் மயமாகி, சாதாரண பொது மக்களை வறுமைக்குள் தள்ளியது. மக்களின் உள்ளக் குமுறலை வாக்குகளாக மாற்றிக் கொண்ட ஹமாஸ் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது.

இதில் அதிசயம் என்னவென்றால் ஃபதாவின் ஊழலாட்சி நடந்தபோது கண்ணை மூடிக்கொண்டிருந்த சர்வதேச சமூகம் ஹமாஸ் அமைத்த புதிய அரசாங்கம் இயங்கவிடாமல் தடுத்தது. பாலஸ்தீன அதிகார சபைக்கு வழங்கிக் கொண்டிருந்த நிதியுதவிகளை ரத்து செய்தது. பாலஸ்தீனப் பகுதிகளில் இருந்து வரும் வரித்தொகையை இஸ்ரேலுக்குத் திருப்பிக் கொடுக்க மறுத்தது. இதனால் பாலஸ்தீன அரசாங்கத்திற்கு எந்த ஒரு வருமானமும் இல்லாமல் போக அரச நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போனது. மாதக் கணக்காக வழங்கப்படாத சம்பளத்தைக் கேட்டு அரச ஊழியர்கள் போராடியபோது ஹமாசிடம் போய் வாங்குமாறு கூறி விரட்டியது ஃபதா. உண்மையில் தொழிலாளர்களின் கஷ்டத்தை ஃபதா தனது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டது. பாடசாலை ஆசிரியர்களை வேலைநிறுத்தம் செய்யுமாறும் ஹமாஸ் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுமாறும் தூண்டியது. ஏகே 47 சகிதம் சென்ற பொலிசார் ஹமாஸ் அரச அலுவலகங்களுக்குள் நுழைந்து நாசம் விளைவித்தனர். தெருக்களில் (ஃபதா ஆதரவு) பொலிஸ்காரர்கள் ஆயுதமேந்திய ஹமாஸ் உறுப்பினர்களை வலுச் சண்டைக்கு இழுத்தனர். இது ஃபதா - ஹமாசிற்கு இடையிலான சகோதர யுத்தமாகப் பரிணமித்தது.

பாலஸ்தீனத்தினுள் உண்மையில் என்ன நடக்கிறது? அங்கே ஒரு சதிப் புரட்சிக்கு ஒத்திகை பார்க்கப்படுகின்றது! அமெரிக்கா, ஐரோப்பா, இஸ்ரேல் ஆகிய பாலஸ்தீன விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகள் ஃபதா போன்று தம்மோடு ஒத்துழைக்கக் கூடியவர்களையே எவ்வழியிலும் ஆட்சியிலிருத்த விரும்புகின்றனர். பெரும்பான்மை மக்கள் ஹமாஸ் போன்ற எதிர்க்கட்சிகளைத் தெரிவு செய்தாலும் அந்த



ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. இருப்பினும் ஃபதா நண்பர்களுக்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாவிட்டால், வேறுவழியில்லாமல் சதிப்புரட்சி மூலம் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். அதற்கான அடிப்படையை உருவாக்கும் பொருட்டு ஹமாஸ் ஆட்சி மக்களுக்கு பொருளாதாரக் கஷ்டங்களையும் கலவரங்களையும் இன்னபிற இன்னல்களையும் மட்டுமே கொடுக்க முடியும் என்ற கருத்து திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. இறுதியில் தனது கையாலாகாத்தனத்தை உணர்ந்த ஹமாஸ் அரசாங்கம் மக்கள் நலன் கருதி பதவி துறக்கவும் ஃபதாவுடன் தேசிய ஐக்கிய முன்னணிக்கு உடன்பட்டதையிட்டு நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம்.

ஹமாஸ் அரசாங்கத்தை இயங்கவிடாமல் தடுக்கும் பொருட்டு ஏற்கனவே இஸ்ரேலிய படைகள் ஹமாஸ் அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயங்கரவாதத் தொடர்பு குற்றம் சாட்டி சிறையில் அடைத்தும், அது போதாதென்று மீதமிருந்த ஹமாஸ் அரச அதிகாரிகளின் வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள் யாவும் ஃபதா குண்டர்களால் தாக்கி நாசமாக்கப்பட்டன. அவ்வதிகாரிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் வந்த வண்ணம் உள்ளன. இதைவிட, ஒருமுறை பாப்பரசர் முஸ்லிம்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து பிரச்சினை எழுந்த காலத்தில் சில பாலஸ்தீன கிறிஸ்தவ தேவாலயங்கள் இனந்தெரியாதவர்களால் தீயிடப்பட்டன. அந்த இனந்தெரியாதவர்கள் ஃபதா குண்டர்களாக இருக்கலாம் என்றும் கிறிஸ்தவர்களை ஹமாசிற்கு எதிராகத் திருப்பிவிடும் நோக்கோடு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

இதற்கிடையில் மிக இரகசியமாகப் பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பாலஸ்தீன அதிகாரமையம் இருக்கும் ரமலா நகரம் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்படுகின்றது. அந் நகரத்தில் பாராளுமன்றம், அமைச்சுகள் ஆகியவற்றோடு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பாலஸ்தீன மத்தியதர வர்க்கத்தின் வசிப்பிடங் களும் அமைந்துள்ளன. சுருக்கமாக, வசதி படைத்தவர்கள் மட்டும் வாழும் நகரத்தில் ஆடம்பரப் பொருட்களை விற்கும் விற்பனை நிலையங்கள் உள்ளன. ரமலாவிற்கு சிறிது துாரத்தில் இரகசியமான இடத்தில் ஜனாதிபதி அப்பாஸிற்கு விசுவாசமான சிறப்புப் பாதுகாப்புப்படை முகாமிட்டுள்ளது. இந்த முகாமில் அமெரிக்க, எகிப்து, ஜோர்தானிய இராணுவ ஆலோசகர்கள் பயிற்சியளிக்கின்றனர். இந்தச் சிறப்புப் படைக்கென மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து கொள்ள இஸ்ரேலும் அனுமதியளித்துள்ளது.

இன்றைய நிலையில் ஹமாஸ் பல பின்னடைவுகளைச் சந்தித்தபோதும் அதன் பலம் குறையவில்லை. பல ஆயுதங்களை ஹமாஸ் இன்னமும் பயன்படுத்தாமல் பதுக்கி வைத்துள்ளது. இதனைக் கவனத்தில் எடுத்துத்தான் அப்பாஸின் சிறப்புப் பாதுகாப்புப் படைக்கு புதிய ஆயுதங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாடுகளின் ஆசியுடன் வன்முறையில் ஈடுபடும் ஃபதா குண்டர்கள் ஹமாஸை வலுச்சண்டைக்கு இழுப்பதன்மூலம் சதிப்புரட்சிக்கான திட்டத்தை நிறைவேற்ற முயல்கின்றன. இந்த விடயம் ஹமாஸிற்கு நன்றாகவே தெரியும். அதனால் எல்லா வகையான சீண்டலுக்கும் அசாத்தியமான அமைதி காக்கிறது. பொறுமை இழந்த ஃபதா என்றைக்கு சதிப்புரட்சிமூலம் ஆட்சிக்கு வருகின்றதோ அன்றைக்கு பாலஸ்தீனத்தில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும். அண்மையில் காசா பகுதியில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஹமாஸ் தலைவர் ஹனியா மீதான கொலை முயற்சியில் டஹ்லன் என்ற ஃபதா தலைவரின் பெயர் அடிபட்டது.

யார் இந்த டஹ்லன்? இஸ்ரேலுக்கு வக்காலத்து வாங்குபவராகப் பரவலாக அறியப்பட்டவர். ஜெனீவா ஒப்பந்தத்திற்கு பாடுபட்டவர். தற்போது அமெரிக்க - இஸ்ரேல் ஆதரவில் சதிப்புரட்சிக்குத் தயாராகும் இராணுவத் தந்திரோபாய வாதி. எதிர்காலத்தில் பிரபலமாகப்போகும் இவரைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## லெபனான்:
### கொலையுதிர்காலம்

“மாளிகைக்குள் ஒளிந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். உங்கள் கண்களையும் காதுகளையும் திறந்து இக்காட்சியைப் பாருங்கள். சர்வதேச ஆதரவைத் தேடியபோதும், அமெரிக்காவோ அல்லது பிற மேலைத்தேய நாடுகளோ உங்களுக்கு உதவப் போவதில்லை. ஏனெனில் லெபனான் மக்கள் தங்கள் தேசத்தை திரும்பக் கேட்கிறார்கள். ஷியா-சுன்னி முஸ்லிம்களுடன் கிறிஸ்தவர்கள், டுருசியர்கள் அனைவரும் இணைந்துள்ளனர். உங்களுக்கு அதிகாரம் வேண்டும். எங்களுக்கு சகோதரத்துவம் வேண்டும். நீங்கள் நாட்டைத் துண்டாடி அதிகாரத்தை நிலை

நாட்ட விரும்புகிறீர்கள். நாங்கள் மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறோம். நீங்கள் அமெரிக்கர்களைக் கூட்டி வருகிறீர்கள். நாங்கள் அவர்களை விரட்டி அடிக்கிறோம்"

- பெய்ரூட் நகர மத்தியில் அரசுக்கெதிரான ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு முன்பு ஹிஸ்புல்லா கட்சியின் பிரதித் தலைவர் ஷேக் நய்ம் ஹாசிமின் உரையின் ஒரு பகுதி

(டெய்லி ஸ்ரார் லெபனான் - 11.12.06)

மேற்குறிப்பிட்ட செய்திகளை நீங்கள் எந்த ஒரு சர்வதேச ஊடகத்தின் மூலமும் கேட்டிருக்க முடியாது. சுதந்திரமாகச் செய்தி வழங்குவதாக பீற்றிக் கொள் ளும் இந்த ஊடகங்கள் எல்லாம் செய்வதெல்லாம் ஒரு பக்கச் சார்பான பிரச்சாரம்தான். அவர்களின் 'அப்பா வித்தனமான செய்தியறிக்கைகளில்' எவ்வாறு அரசி யல் வாடையடிக்கின்றது என்பதைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வது கடினம். "ஈரானின் சொற்கேட்டு நடக்கும் சிரிய ஆதரவு ஹிஸ்புல்லா லெபனான் அரசாங்கத்தை சதிப்புரட்சி மூலம் கவிழ்க்கப் பார்க் கின்றது" என்று புஷ் சொன்ன தேவ வாக்கை மெய்ப் பிக்கும் பொருட்டு ஊடகங்கள் வழங்கிவரும் சேவை அளப்பரியது.

நீண்ட காலமாகப் பாரிய மாற்றங்களற்று நகர்ந்து கொண்டிருந்த லெபனான் அரசியல் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரியின் அகால மரணத்திற்குப் பின்னர் எதிர் பாராத திருப்புமுனையைச் சந்தித்தது. 2005ம் ஆண்டு தொடக்கத்தில் இடம்பெற்ற இந்தப் படுகொலைக்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரை சரியாக இனம் காணப்படவில்லை. இருப்பினும் அமெரிக்காவும் பிற மேற்குலக நாடுகளும் அவர்களின் ஆதரவு லெபனான் கட்சிகளும் சிரியாவைக் குற்றம் சாட்டின. இவர்களின் கூட்டு முயற்சியால் பெய்ரூத்தில் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்து ஒரு மாதிரியாக லெபனானில் இருந்து சிரிய இராணுவத்தை விரட்டி விட்டனர். அந் தப் போராட்டத்தை சிரியாவிற்கு எதிரான லெபனான் மக்களின் எழுச்சியாக, அமைதிப் புரட்சியாகக் காட்டி மகிழ்ந்தன மேற்குலக நாடுகள். சிரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது பிரசன்னமாகி இருந்த சர்வ தேச ஊடகவியலாளர்கள் புரட்சியின் முன்னேற்றம் குறித்து, கிரிக்கெட் போட்டிக்கு வர்ணனை செய்வது போல செய்தி வழங்கிக் கொண்டிருந்தனர். இளைஞர் களாகப் பார்த்து விரட்டிப் பிடித்துப் பேட்டி எடுத்து அவர் களின் மனதில் இருந்த சிரியா மீதான வெறுப்பை உலகறியச் செய்தனர். சிரியா தானாகவே படை களை விலத்திக் கொள்ள முன்வந்ததும் இந்த 'மக்கள் புரட்சி' சப்பென்றாகிவிட்டது.

அந்தப் புரட்சியை நடத்துவதற்கு சில அரசியற் கட்சிகள் பெருந்தொகை பணம் செலவளித்து ஆட்களைச் சேர்த்ததையும் அது தன்னிச்சையான மக்கள் எழுச்சியாகவல்லாமல் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்த ஒன்று என்பதையும் மேற்குலக நாடுகளின் தலையீட்டையும் பற்றி எதுவும் கூறாமல் ஊடகங்கள் மறைத்துவிட்டன. அதைவிட, அந்த ஆர்ப்பாட்டங் களில் அனைத்து லெபனான் மக்கள் சமூகங்களும் பங்குபற்றவில்லை என்பதையும், குறிப்பாக, சுன்னி முஸ்லிம் சமூகமும் கிறிஸ்தவர்களும் மட்டுமே பங்கு பற்றியதென்ற உண்மையையும் கூறவில்லை. அது போகட்டும், சிரிய இராணுவம் இல்லாத சூழ்நிலையில் நடந்த பொதுத் தேர்தலில் சிரிய எதிர்ப்புக் கட்சிகள் அமோக வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்து விட்டது. பகிரங்கமாக சிரியாவை ஆதரிக்கும் ஹிஸ் புல்லா அமல் போன்ற கட்சிகள் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

2006ம் ஆண்டு கோடைகாலத்தில் தெற்கு லெப னான்மீது இஸ்ரேல் படையெடுத்து ஹிஸ்புல்லாவை அழிக்கிறேன் என்று சொல்லி விமானக்குண்டுகளை வீசி லெபனான் பொதுமக்களையும் பொருளாதாரத் தையும் அழித்த ஒரு மாதகால யுத்தம் ஓய்ந்து இஸ்ரேல் பின்வாங்கிய பின்பு, எதிர்பார்த்ததுபோல அரசியல் களத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. போர் நடந்த காலத்தில் காணாமல் போயிருந்த பிரதமர் சினியோ ராவும் சாட் ஹரீரி தலைமை தாங்கும் (சுன்னி முஸ்லிம்













களை மட்டும் கொண்ட) கட்சியும், தமது வழக்கமான மேற்குலக சார்பு அரசியலைக் காட்ட ஆரம்பித்தனர். அமெரிக்க ஆலோசனையின்படி தமது ஆதரவாளர் களை மட்டும் கொண்ட அரசாங்கத்தை அமைக்க திட்டம் தீட்டினர். இதற்கிடையில் ரபீக் ஹரீரி படு கொலையில் சிரியாவை மாட்டிவிட ஐ. நா. விசாரணைக் குழு அமைக்கவிருக்கும் நீதிமன்றத்திற்கு பச்சைக் கொடி காட்டினர். பிறகட்சிகளை கலந்தாலோசிக் காமல் நடந்த இந்த இரகசிய ஏற்பாடுகளின் விளைவு களை முன்கூட்டியே புரிந்துகொண்ட ஷியா முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹிஸ்புல்லா மற்றும் அமல் ஆகிய கட்சிகளின் அமைச்சர்கள் பதவி விலகினர். இதனால் சினியோராவின் அரசாங்கம் கவிழும் அபாயத்தை எட்டியது. இந்தக் கட்டத்தில்தான் ஹிஸ்புல்லா தலைமையிலான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட் டங்கள் பெய்ரூத்தில் இடம் பெற்றன.

அந்த ஆர்ப்பாட்டங்களில் நாடுமுழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட போதும் ஹிஸ்புல்லா மட்டுமல்லாது ‘அமல்’ கட்சியின் ஆதரவாளர்களுடன் அவுன் தலைமை தாங்கும் ‘சுதந் திர தேசாபிமான இயக்கம்’ என்ற கிறிஸ்தவ கட்சியின் ஆதரவாளர்களும் பங்குபற்றிய போதும் சர்வதேச ஊடகங்களின் கண்களுக்கு ஹிஸ்புல்லா மட்டுமே தென்பட்டது. மேலும் அவை இதனை சிரிய ஆதரவு சதிப்புரட்சிக்கான தயார்ப்படுத்தலாக பார்த்தன. 2005ம் ஆண்டு மேற்குலக ஆதரவாளர்களின் போராட் டம் ‘மக்கள் புரட்சி’ யாகத் தெரிந்தது. 2006ம் ஆண்டு மேற்குலக எதிர்ப்பாளர்களின் போராட்டம் ‘சதிப் புரட்சி’யாக தெரிகின்றது! இதுவன்றோ ஊடக தர்மம்.

லெபனானின் அரசியல் சக்திகளை ஊடகங்கள் சிரிய ஆதரவு, சிரிய எதிர்ப்பு என்று வகைப்படுத்திக் காட்டிய போதும், நாம் அதனை மேற்குலக சார்பு, மேற்கு லக எதிர்ப்பு என்றே புரிந்து கொள்ள வேண்டும். லெபனான் மட்டுமல்லாது ஈராக், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் நடக்கும் சகோதர யுத்தங்கள், உள்நாட்டுப் போர்கள் ஆகிய கலைச்சொற்களின் அர்த்தமும் அதுதான்.

லெபனானில் இதுவரை ஜனநாயகத்தை மதித்து அமைதியாக நடந்த மக்கள் போராட்டங்கள் விரைவில் ஆயுதப் போராட்டமாக மாறி வன்முறை பெருகும் என்ற அச்சம் தற்போது பொதுமக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது. எழுபதுகளில் இருந்த லெபனான் போல, ஒவ்வொரு சமூகமும் தமக்கென ஆயுதக்குழுக்களை வைத்துக் கொண்டு அரசியல் அதிகாரத்திற்காக கடுமையான யுத்தம் புரிந்த காலம் மீண்டும் வருகின்றது என்பதை பலர் நினைத்துப் பார்க்கவே விரும்புவதில்லை. இருப் பினும் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படாமல் இவ்விரு துருவங்களுக்கிடையிலான இடைவெளி விரியுமாயின், யாரும் விரும்பாத உள்நாட்டுப்போர் மீண்டும் ஏற்ப டலாம்.

லெபனானின் உள்நாட்டு விவகாரமாயினும் சிரியா வின் நலன்களும் அடங்கியுள்ளன. இனிவரப்போகும் போர் சிரியாவையும் இஸ்ரேலோடு மோத வைக்கலாம் அல்லது அப்படி நடக்கலாம் என்று இஸ்ரேலிய இராணு வம் எதிர்பார்க்கின்றது. கோலான் குன்றுப் பகுதியில் சிரியா படைக்குவிப்புகளையும் ஆர்ட்டிலெறி பீரங்கி களையும் நகர்த்தி வருவதாக இஸ்ரேலிய இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. இரு நாடுக ளுக்கும் இடையில் போர் மூளுமாயின் சிரியாவின் நட்பு நாடு ரஷ்யாவிலிருந்து வரும் ஆயுத விநியோகத்தை தடை செய்ய இப்போதே இஸ்ரேல் சர்வதேச மட்டத்தில் முயற்சி செய்கின்றது. சிரியாவிடம் உள்ள யுத்த விமா னங்கள், ஆயுதத் தளபாடங்கள் என்பன சோவியத் காலத்தில் வாங்கப்பட்டவை என்பதும், பழசாகிக் கொண்டிருக்கும் இந்தத் தளபாடங்கள் தற்போதுள்ள நவீன ஆயுதங்கள் முன்னால் அதிகளவு பயனைத் தரப்போவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. லெபனானில் இருந்து சிரியப் படைகள் வெளியேறி னால் அங்கு உள்நாட்டுப்போர் மீண்டும் வரும் என்ற அச்சம் முன்பிருந்தது. இன்றைய நிலையில் அப்படி யொரு போர் ஏற்படாவிட்டால் சிரியா அதனை உருவாக் கும். அரசியற்படுகொலைகள் அதனைக் கட்டியம் கூறி

நிற்கின்றன.

போர் தவிர்க்கவியலாதது என்று சிரியாவும் உணர்ந்துள்ளது. தற்போது பலதரப்பட்ட இராஜ தந்திர நடவடிக்கைகளால் வன்முறையைத் தவிர்த்து வந்தாலும், சர்வதேச அங்கீகாரத்தைத் தேடினாலும் வளைகுடாப் போர் போன்ற தருணங்களில் அமெரிக்கா பக்கம் நின்றாலும் பொருளாதாரத்தில் தாராளவாதத் தைப் புகுத்தினாலும் சிரியாவின்மீதான அமெரிக் காவின் சந்தேகம் தீரவில்லை. சிரியா இஸ்ரேலுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்யாததாலும் இஸ்ரேலை எதிர்க்கும் தீவிரவாத இயக்கங்களுக்கு அடைக் கலமும் ஆதரவும் அளித்து வருவதாலும் அமெரிக்கா இன்னமும் சிரியாவை ஒதுக்கப் பட்ட நாடுகளின் பட்டியலில் இருந்து எடுக்கவில்லை. மறுபக் கத்தில் அந்த நிபந்தனை களுக்கெல்லாம் உடன்பட்டால், கோலான் குன்று போன்ற இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப் பட்ட பகுதிகளை நிரந்தரமாக விட்டுக் கொடுக்கவேண்டி யிருக்கும். லெபனானில் எந்தச் செல்வாக்கும் செலுத்த முடியாது. அவற்றைவிட இஸ்ரேல் இறுதி யில் தானே வென்றதாக அகங் காரத்துடன் நடந்து கொள்ளும். 2006இன் யூலை மாத லெபனான் யுத்தத்தில், முதல்முறையாக ஒரு அரபு கெரில்லாக் குழு, பன்மடங்கு பலசாலியான இஸ் ரேலை ஒரு மாதமாக எதிர்த்து நின்று வெற்றிவாகை சூடியதாக ஹிஸ்புல்லா மார்தட்டிக் கொள் வதும், அந்த வெற்றிக் களிப்பில் சிரியா தனக்கும் பங்கிருப்பதாக பெருமிதமடைவதும், எதிர்காலத்தில் இஸ்ரேலுக்குப் பயந்து மண்டியிடத் தேவையில்லை என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

மத்திய கிழக்கின் பலமான இராணுத்தைக் கொண்டுள்ள இஸ்ரேலை எதிர்த்து போரிடுவதற்கு ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்ற கெரில்லாக் குழுக்கள் பிரயோசனமாக இருக்கும் என்று சிரியா கணக்குப் போட்டுள்ளது. இவ்வியக்கங்கள் இஸ்ரேலிய கள நிலவரங்களால் ஏற்கனவே பரிச்சயமானவர்கள் என் பதும், சர்வதேச மட்டத்தில் தேவையற்ற பிரச்சினை எழுவதைத் தவிர்க்கும் பொருட்டு, சிரியா இதுவரை அவ்வியக்கங்களுக்கான அரசியல் ஆதரவுக்கப்பால் நகரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. லெபனா னிற்குள் இன்னொரு இஸ்ரேலிய எதிர்ப்புச் சக்தி இதுவரை செயலூக்கமற்று உறங்கிக் கிடக்கின்றது. லெபனானில் பல்வேறு இடங்களில் நிரந்தரமாகி விட்ட பாலஸ்தீன அகதி முகாம்களும், அங்கே வாழும் பல்லாயிரக் கணக்கான, இழப்பதற்கு எதுவுமற்ற அகதிகளும்தான் அந்த சக்தி.

பெரும்பாலான அகதி முகாம்கள் ஃபதா அல்லது PLFP போன்ற பாரம்பரிய பாலஸ்தீன இயக்கங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. அந்த இயக்கங்களின் பயிற்சி பெற்ற போராளிகளும் ஆயிரக் கணக்கான ஆயுதங் களும் நீண்ட காலமாக அமைதியாக ஓய்வெடுக் கின்றன. இஸ்ரேல் மீண்டுமொரு யுத்தத்தை லெபனான் மீது திணிக்குமானால், அது ஹிஸ்புல்லாவுடன் மட்டும் நிற்காது, பாலஸ்தீன முகாம்களில் அகதிகளை பாது காக்கும் ஆயுதங்களையும் அபகரிக்க எத்தனித்தால், பாலஸ்தீனர்களும் இறுதிவரை எதிர்த்து சண்டையிடக் காத்திருக்கின்றனர். "இம்முறை யுத்தம் வந்தால் நாம் லெபனானிலேயே தொடர்ந்து தங்கப்போவதில்லை. இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்த்து சண்டை யிட்டுக்கொண்டே நமது தாயகத்திற்கு (பாலஸ்தீனம் - இஸ்ரேல்) நாம் திரும்பிப் போவோம்." இவ்வாறு கூறினார் ஒரு அகதிமுகாம் நிர்வாகி.



சுருங்கக்கூறின், லெபனானின் உள்நாட்டுப் போரினை ஹிஸ்புல்லா ஆரம்பித்து வைக்கும் சாத்தி யங்கள் குறைவு. சுன்னி முஸ்லிம் சமூகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ அமெரிக்க சார் பான சாட் ஹரீரியின் கட்சியைச் சேர்ந்தவர்களே வன் முறைகளில் இறங்குவர். அந்தக் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகள் இப்போதே இரகசியமாக ஆயுதங்களை வாங்கி வருகின்றனர். கிறிஸ்தவர்கள் இரண்டு முகாம் களாகப் பிரிந்துள்ளதால், அவர்கள் இம்முறை தீர்மான கரமான அரசியல் சக்தியாக இருக்கப் போவதில்லை. எழுபதுகளில் ஷியா, டுருசிய சமூகங்களில் இருந்து எழுந்த இடதுசாரி சக்திகளை எதிர்த்து, வலதுசாரி கிறிஸ்தவர்கள் போரிட்டனர். அப்போது பிரான்ஸ் கிறிஸ்தவ ஆயுதக் குழுக்களை பலப்படுத்தியது. அந்த இடத்தில் தற்போது அமெரிக்காவும் சாட் ஹரீரியின் ஆயுதக்குழுவும் வந்து கொண்டிருக்கின்றன.

லெபனான் பிரச்சினை வெறுமே மதம் சார்ந்தது மட்டுமல்ல.

அது வர்க்கங்களின் முரண்பாடு, வல்லரசுப் போட்டி ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.